## யூலை – 24 – செவ்வாய்

### புனித பிரான்சிஸ் சொலானுஸ்

### ஆண்டவரே, உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும்: திபா. 85:7

**முதல் வாசகம் : மீக்கா7: 14 – 15, 18 – 20**

ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம்முடைய மக்களை உமதுகோலினால் மேய்த்தருளும்! அவர்கள் கர்மேலின் நடுவே காட்டில் தனித்து வாழ்கின்றார்களே! முற்காலத்தில் நடந்ததுபோல அவர்கள் பாசானிலும் கிலயாதிலும் மேயட்டும்!எகிப்து நாட்டிலிருந்து நீங்கள் புறப்பட்டுவந்து நாளில் நடந்தது போல நான் அவர்களுக்கு வியத்தகு செயல்களைக் காண்பிப்பேன். உமக்குநிகரான இறைவன் யார்? எஞ்சியிருப்போரின் குற்றத்தைப் பொறுத்து நீர் உமது உரிமைச்சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கின்றீர் உமக்கு நிகரானவர் யார்? அவர் தம்சினத்தில் என்றென்றும் நிலைத்திரார் ஏனெனில், அவர் பேரன்புகூர்வதில் விருப்பமுடையவர். அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம்தீச்செயல்களை மிதித்துப்போடுவார். நம்பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்துவிடுவார்.பண்டையநாளில் எங்கள் மூதாதையருக்கு நீர் ஆணையிட்டுக் கூறியதுபோல யாக்கோபுக்கு வாக்குப் பிறழாமையையும் ஆபிரகாமுக்குப் பேரன்மையும் காட்டியருள்வீர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்னை எங்களுக்குக் காட்டியருளும்.

**நற்செய்தி : மத்தேயு12 : 46 – 50**

இவ்வாறு மக்கள் கூட்டத்தோடு இயேசு பேசிக்கொண்டிருந்த போது அவருடைய தாயும் சகோதரர்களும் வந்து அவருடன் பேச வேண்டும் என்று வெளியே நின்றுகொண்டிருந்தார்கள்.ஒருவர் இயேசுவைநோக்கி, ”அதோ, உம்தாயும் சகோதரர்களும் உம்மோடு பேசவேண்டும் என்று வெளியே நின்றுகொண்டிருக்கின்றார்கள்” என்றார்.அவர், இதைத் தம்மிடம் கூறியவரைப் பார்த்து, ”என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?” என்றுகேட்டார்.பின் தம் சீடர்பக்கம் கையைநீட்டி, ”என்தாயும் சகோதரர்களும் இவர்களே. விண்ணகத்திலுள்ள என்தந்தையின் திருவுளத்தை நிறை வேற்றுபவரே என்சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது இறைமகன் இயேசு எமது பாவங்களை மன்னித்து புதிய தொரு வாழ்வைக் கொடுத்து, அதன்படி வாழ அழைக்கின்றார். எனவே தான் முதல் வாசகத்தில் தொலைந்துபோன ஆடுகளாக உம்மை விட்டுவிலகிப் போன எங்களை மீண்டுமாக ஒன்று சேர்த்தருள வேண்டுமென்று கூறுவதைப் பார்க்கின்றோம். (மீக்கா 7: 14) இன்று நாங்கள் வாழும் வாழ்க்கை முறைகளினால் இறைவனின் தந்தைமகன், மகள் என்ற உரிமைப் பேற்றை இழந்து விடுகின்றோம். எனவேதான் நாங்கள் பாவழிகள், தீய நடத்தைகள், தீய பாவநாட்டங்கள் இவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக இறைவனின் சித்தத்தை நிறைவேற்றினால் தந்தைமகன், தாய், சகோதர, சகோதரிகள் என்ற உரிமையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று கூறுவதை (மத். 12: 50) பார்க்கின்றோம். அவ்வாறான உறவு முறையை நாங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் தந்தை மகன் உறவை ஏற்படுத்துவதற்கு பாலமாக அமைவது செபம். இச்செபவாழ்வானது எமக்கு புத்துணர்ச்சியை, புதுபொழிவை ஏற்படுத்தி எமது வாழ்வை புதுப்பிதுப்பிக்கின்றது. எனவே இச்செபவாழ்வை தினமும் எமது குடும்பத்தில் முதலில் ஏற்படுத்திக் கொள்வோம். பின்பு அதன் மூலம் பெற்றுக்கொண்ட அனைத்து நன்மைகளுக்கும் இறைவனுக்க நன்றி கூறி அதை மற்றவர்களுக்கு பகிர்ந்து இறை இயேசுவின் சாட்சியின் மக்களாக நாம் வாழ்வோம்.